**<u>நல்ல நண்பன் இயேசு</u>**

நல்ல நண்பன் இயேசு என்னை என்றும் காப்பார்
கைவிடாமலே காத்து நடத்துவார்
கண்மணிபோல் காப்பார் கண்ணீரெல்லாம் துடைப்பார்
கடந்ததெல்லாம் மறக்கச் செய்வார்

மாயையே இந்த உலகம் மாயையே
மாயையே உலகில் எல்லாம் மாயையே
போதுமே இயேசு ஒருவர் போதுமே
போதுமே இயேசு மட்டும் போதுமே

கண்ணீரோடு நடந்த நாட்கள் மாயையானதே
கவலையோடு திரிஞ்ச நாட்கள் கடந்து போனதே
உலகப் பாடுகள் உலக வேதனை
இயேசு வந்தால் தீருமே
இயேசு வந்தால் மாறுமே

ஒளிவீசும் சூரியனும் இருளாகுமே
சுவாசிக்கும் காற்றுக்கூட நின்று போகுமே
சேர்த்த ஆஸ்தியும் பாச ஜனங்களும்
உன்னை விட்டு போகுமே
உன்னை விட்டு விலகுமே